Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SIVAKASI
STC NO. 434 /2021

**Depostitions of DW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | திரு. செளகத் அலி, |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2024.

Signature of Witness.

20.05.2024

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் SDB செக்யூரிட்டி சர்வீசில் வேலை ரீஜீனல் மேனேஜராக வேலை பார்க்கிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் நிறுவனத்தில் இருந்து அதிகார கடிதம் கொடுத்துள்ளார்கள். அந்த அதிகார கடிதம் **எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி செல்வமுத்து 17.12.2018 ல் இருந்து 20.12.2020 வரையிலான தேதிவரை எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்தார். எதிரி எங்கள் நிறுவனத்தில் செக்யூரிட்டி கார்டாக வேலை பார்த்தார்.

2. 01.11.2019 ம் தேதியன்று எதிரி எங்கள் நிறுவனத்தில் வேலை செய்தார். அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் எதிரி எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்ததற்கான வருகை பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி வருகை பதிவேடு நகலானது (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **எ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. . எதிரி நவம்பர் மாதத்தில் வேலை செய்து சம்பளம் பெற்றதற்கான வருமான ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தனிநபர் நிறுவனத்திற்கு செக்யூரிட்டிக்காக வேலை ஆட்களை நாங்கள் அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பி வைக்கும் நபர்கள் ஒரு நாளைக்கு வேலை பார்ப்பார்கள் என்றால் ஒரு பதவியை இரண்டு நபர்கள் என பகலில் ஒருவரும், இரவில் ஒருவரும் வேலை பார்ப்பார்கள். பகல் வேலை நேரமானது காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணி வரை ஆகும். இரவு வேலை நேரமானது இரவு 8 மணியில் இருந்து காலை 8 மணி வரை ஆகும். 01.11.2019 ம் தேதியன்று இரவு 8 மணிக்கு ஒரு நபர் வேலைக்கு வந்தால் கூட அன்றைய தேதியில் அவர் வேலை பார்த்ததாக தான் கணக்கு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் டிசம்பர் மாத வருகை பதிவேட்டில் பகல் நேரத்தில் வருபவர்களை D என்றும், இரவு நேரத்தில் வருபவர்களை N என்றும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான், பகல்

நேரத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு மதிய உணவுக்கு உண்டான தொகை அளிக்கப்படும். அதனால் D என்று குறிப்பிட்டுளோம்.

2. 01.11.2019 ம் தேதியன்று எதிரி பகல் நேரத்தில் வேலை செய்தார் என்று D என்று குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மாத வருகை பதிவேட்டில் எதிரி மொத்தம் 9 நாட்கள் பகல் நேரத்தில் வேலை பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கு மேல் உள்ள நபரான சதீஸ்குமார் என்பவர் 27 நாட்கள் பகலில் வேலை பா ர்த்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், அவர் ஷிப்ட் இன்சார்ஜ் ஆவார். அதனால் அவருக்கு பகலில் தான் வேலை ஆகும். எதிரிக்கு அடுத்து இருக்கும் வின்சென்ட் என்ற நபர் 17 நாட்கள் பகலில் வேலை செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சிவகாசியில் இருந்து கோயம்புத்தூருக்கு 6 மணிநேரத்தில் சென்றுவிடலாமா என்றால் 6 மணி நேரத்தில் இருந்து 8 மணிநேரத்தில் சென்றுவிடலாம். பகலில் 11-12 மணி அளவில் சிவகாசியில் இருந்து கிளம்பினால் இரவு 8 மணிக்கு கோயம்புத்தூருக்கு சென்றுவிடலாம் என்றால் சரியாக சொல்லமுடியாது. ஒரு நபர் 11-12 மணி அளவில் சிவகாசியில் இருந்து கிளம்பினால் இரவு 8 மணிக்கு கோயம்புத்தூருக்கு சென்றுவிடலாம் என்றும், தற்போது சரியாக சொல்ல முடியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் எதிரி 01.11.2019 ம் தேதியன்று பகலில் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி அன்றைய தேதியில் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்பதை சிசிடிவி கேமராவை பார்த்தால் தெரியும். சிசிடிவி கேமரா ஆவணத்தை தாக்கல் செய்ய நான் தயாராக இருக்கிறேனா என்றால் கோயம்புத்தூர் ஆம்போ

நிறுவனத்தை கேட்டால்தான் தெரியும். எதிரி எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.